


தமிழர் வரலாற்றில்

# அழிக்கவே முடியாத பண்பாட்டுத் திருநாள்!

## ‘தமிழ்நாடு நாள்’ குறித்து – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜூலை 20 -

“தமிழர் வரலாற்றில் அழிக்கவே முடியாத பண்பாட்டுத் திருநாள்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “தமிழ்நாடு நாள்” குறித்து தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களால் நமது மாநிலத்துக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டப்பட்ட பொன்னாள் இன்று. தமிழர் வரலாற்றில் அழிக்கவே முடியாத பண்பாட்டுத் திருநாள். “தமிழ்நாடு” என்று நமது அண்ணா மூன்று முறை முழங்க, “வாழ்க” முழக்கத்தால் சட்டப்பேரவை அதிர்ந்த நாள்.**



**இந்தியாவில் மட்டுமல்ல; உலக அளவில் நமக்கென தனி அடையாளம் உண்டான உணர்ச்சிமிகு வரலாறு அது. நவீனச்சிந்தனைகளால் வளர்ச்சிப் பாதையில் புதுப்பாய்ச்சலைத் தொடங்கிய நமது தமிழ்நாட்டை எந்தப் பிற்போக்குச் சக்தியாலும் இன்றளவும் தடுக்க முடியவில்லை. இனியும் முடியாது.**

**ஆதிக்கம் எந்த வடிவில் வந்தாலும் எதிர்ப்போம். திராவிட நாயகர் நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அன்னைத் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காப்போம்.**

**நாமும் முழங்குவோம்!**
**வாழ்க தமிழ்நாடு!**

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.20 லட்சம் மதிப்பில்

# விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள் - நிதி உதவி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 20 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பாக ரூ.20 லட்சம் மதிப்பில் விளையாட்டு உபகரணங்கள், உயர்தர பயிற்சி பெற காசோலை வழங்கி, வீராங்கனைகள் ஸ்னூக்கர் அனுபமா, வாள்வீச்சு மரியா அக்‌ஷிதா ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பன்னாட்டு அளவிளான சைக்கிள் போட்டியில் பங்கேற்க தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய சைக்கிள் வீரர் பிரதீப் சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பாக ரூ.16 இலட்சம் மதிப்பிலான சர்வதேச தரத்திலான சைக்கிளையும், தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய வில்வித்தை வீராங்கனை கண்மணி அவர்களுக்கு போட்டிகளில் பங்கேற்க ரூ.2.8 இலட்சம் மதிப்பிலான சர்வதேச தரத்திலான வில்வித்தை உபகரணத்தையும், உலக பார்வையற்றவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற மகாராஜா அவர்களுக்கு அமெரிக்காவில் உயர்தர பயிற்சி பெற ரூ.1.20 இலட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

மேலும், அமைச்சர் அவர்கள் ஆசிய பெண்கள் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் 2024-ல் தங்கப்பதக்கம் வென்ற வீராங்கனை செல்வி அனுபமா, ஆசிய ஃபென்சிங் கான்ஃபெடரேஷன் ஆணையத்தின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியரான வாள்வீச்சு வீராங்கனை மரியா அக்‌ஷிதா அவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனிருந்தார்.

